உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 17.05.2026 • மலர் 04 • இதழ்: 137 • Edition : Nagercoil • 17.05.2026 • Vol : 04 • Issue : 137 • Page : 4 • Rs. 5/-

### உலக அளவில் 3வது பெரிய ஸ்டார்ட்அப்

# சூழலியலை கொண்ட நாடாக இந்தியா உள்ளது

## நெதர்லாந்தில் பிரதமர் மோடி பேச்சு

நெதர்லாந்த், மே. 17

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக நெதர்லாந்து நாட்டுக்கு சென்றடைந்த பிரதமர் மோடிக்கு அந்நாட்டில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்திய கலாசாரம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை போற்றும் வகையில் இளம் கலைஞர்கள் சார்பில் நடந்த நடனம், இசை கச்சேரி உள்ளிட்டவற்றை அவர் கண்டு களித்தார்.

இதன்பின்னர், நெதர்லாந்து நாட்டின் திஹேக் நகரில் இந்திய வம்சாவளியினர் திரளாக கலந்து கொண்ட நிகழ்ச்சியில், பிரதமர் மோடி பங்கேற்று பேசினார். அப்போது அவர், நான் நெதர்லாந்தில் இருக்கிறேன் என்பதே மறந்து விட்டது. இந்தியாவில் மட்டுமே கொண்டாடப்படும் ஒரு திருவிழாவில் கலந்து கொண்டது போன்று உணர்ந்தேன்.

இந்திய நட்புறவுக்கான வாழும் அடையாளங்களில் ஒன்றாக திஹேக் உருவாகி இருப்பது போன்று உள்ளது என்றார். நெதர்லாந்தின் தலைமையுடன் எப்போதெல்லாம் பேசுகிறேனோ, அப்போதெல்லாம் இந்திய வம்சாவளியினரை பற்றி அவர்கள் பாராட்டும் வகையிலேயே பேசுகின்றனர். நெதர்லாந்தின் சமூக மற்றும் பொருளாதாரத்தில் நீங்கள் பெரும் பங்காற்றி வருகிறீர்கள்.

இதனால், ஒவ்வோர் இந்தியரும் பெருமையடைகிறார் என்றார்.

இந்தியா இன்று பெரிய அளவில் கனவு காண்கிறது. செயற்கை நுண்ணறிவு மற்றும் அரைகடத்திகள் ஆகிய துறைகளில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல இந்திய இளைஞர்கள் அதிக ஆர்வத்துடன் உள்ளனர். உலக அளவில் 3வது பெரிய ஸ்டார்ட்அப் சூழலியலை கொண்ட நாடாக இந்தியா உள்ளது. உலகில் மிக பெரிய அரசு நிதியுடன் கூடிய சுகாதார காப்பீட்டை இந்தியா செயல்படுத்தி வருகிறது என்று அவர் கூறினார்.



## பள்ளி, கல்லூரிகள் அருகே போதைப்பொருள் விற்பனை?

## சோதனை நடத்த மதுவிலக்கு, ஆயத்தீர்வை துறை உத்தரவு

சென்னை, மே. 17

தமிழகத்தை போதைப்பொருள் இல்லாத மாநிலமாக மாற்றப்படும் என்று முதல்அமைச்சர் விஜய் அறிவித்துள்ளார். போதைப்பொருள் கலாசாரத்தை ஒழிக்கும் வகையில் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கும், போதைப்பொருளை சமூக ரீதியாக கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இதற்காக தமிழகம் முழுவதும் போதைப் பொருள் தடுப்பு போலீஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தில் கடுமையான நடவடிக்கை எடுத்து, குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த சூழலில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கமிஷனர் எஸ்.பி.கார்த்திகா போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக கண்டிப்புடன் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்து கலால் வரித்துறை துணை கமிஷனர்கள், உதவி கமிஷனர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். இதே சுற்றறிக்கை மாவட்ட கலெக்டர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

எஸ்.பி.கார்த்திகா அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:

"★ பள்ளிகள், கல்லூரிகள், விடுதிகள், போக்குவரத்து முனையங்கள் உள்பட பல்வேறு இடங்களின் அருகாமையில் போதைப்பொருள், போதை வஸ்துக்கள், சட்டவிரோத மதுபானங்கள் விற்பனை மற்றும் வினியோகம் நடைபெறுகிறதா? என்று தொடர்ந்து சோதனை நடத்தி கண்காணிக்கவேண்டும்.

★ அரசு சாரா அமைப்புகள், தன்னார்வலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், குடியிருப்பு நலச்சங்கங்கள், மகளிர் சுயஉதவி குழுக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் உள்ளூர் மட்டத்தில் ரகசிய தகவல் வழங்குனர் (இன்பார்மர்) வலையமைப்பை உருவாக்கி, போதைப்பொருள் வினியோக கட்டமைப்பை கண்டறியவேண்டும்.

★ சட்டவிரோத, போலி மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை நடைபெறும் அபாயப் பகுதிகளை கண்டறிந்து சோதனைகள் மேற்கொள்ளவேண்டும்.

★ சட்டவிரோத மதுபானங்கள், போதைப்பொருள்கள் உற்பத்தி, கடத்தல் மற்றும் பதுக்கி வைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ போலீசார், போதைப்பொருள் தடுப்பு பிரிவு, டாஸ்மாக், வனத்துறை, ரெயில்வே போலீஸ்மற்றும்அண்டை மாநிலங்கள், யூனியன்பிரதேசங்களின் அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளவேண்டும்.

அதிக விலைக்கு விற்கக் கூடாது

★ டாஸ்மாக் மதுக்கடைகள் மற்றும் உரிமம் பெற்ற கிளப்புகளில் அடிக்கடி மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு விதிமீறல்கள் நடந்தால் கண்டறியவேண்டும்.

★ டாஸ்மாக் கடைகள் மற்றும் பார்கள் அனுமதிக்கப்பட்ட நேரம் மட்டும் இயங்குவதை கண்டிப்பாக உறுதி செய்யவேண்டும். அதிகபட்சசில்லறைவிலையை தாண்டி அதிக விலைக்கு விற்பனை செய்யாததையும் உறுதி செய்யவேண்டும். 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மதுபானம் விற்பனை செய்யவோ, வழங்கவோ கூடாது.

★ சட்டவிரோத பார்களை கண்டறிந்து மூடுவதோடு, பெட்டிக்கடைகளில் சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனை செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒழுங்கு நடவடிக்கை

★ உரிமம் பெற்ற கிளப்புகளில் பார் நடத்துவது ஒரு செயல்பாடாக இருப்பதால், கிளப்புகளின் பிற பொழுதுபோக்கு செயல்பாடுகளும் உறுதி செய்யப்பட வேண்டும்.

★ பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களில் மது மற்றும் போதைப்பொருளின் தவறான பயன்பாடு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். போதை மறுவாழ்வு திட்டங்களை நடத்துவதில் சுகாதாரத்துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். இந்த அறிவுறுத்தல்கள் மிகவும் கவனமாக பின்பற்றப்படவேண்டும். அமல்படுத்துவதில் அலட்சியம் அல்லது கடமையை செய்ய தவறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

### என்னிடம் எதையும் மறைக்காதீர்கள்

## கள ஆய்வு குழுவுக்கு மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்



சென்னை, மே. 17

திமுக தலைவரும், முன்னாள் முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து, 234 தொகுதிகளுக்கும் சென்று கள ஆய்வு செய்ய 38 பேர் கொண்ட குழுவினரை நியமித்திருந்தேன். இன்று அவர்களுடனான சந்திப்பில் இந்த ஆய்வை எப்படி மேற்கொள்வது என, சில முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறேன்.

• நீங்கள் ஒவ்வொருவரும் தலைமைக் கழகத்தின் பிரதிநிதிகளாக, எனது சார்பில் அனுப்பி வைக்கப்படுபவர்கள்.எனதுகாதுகளாகச்செல்பவர்கள்.

• தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றி, கட்சிக்காரர்கள் சொல்லும் உண்மையை அப்படியே வந்து என்னிடம் சொல்வது மட்டுமே உங்கள் வேலை.

• நீங்கள் யாரையும் காப்பாற்றவும் முயற்சி செய்ய வேண்டாம். யாரையும் பழிவாங்கவும் எண்ணக் கூடாது. • இரண்டு பேர் கொண்ட குழுவாகத்தான் யாரையும்சந்திக்கவேண்டும்.ஒருவர்மட்டும்தனியாகச் சந்திக்க கூடாது.

• கழகத்தினரை மனதுவிட்டுப் பேச அனுமதியுங்கள். அவர்களின் குறைகளை, தேர்தல் முடிவுகளுக்கான காரணங்களை அவர்கள் கொட்டித் தீர்க்கட்டும். • தலைவரான என் மேலேயே குறை சொன்னாலும் பரவாயில்லை. அதைக் குறித்து வைத்து உங்களது அறிக்கையில் வழங்குங்கள். • நிர்வாகிகளின் உணர்வு என்ன?அவர்கள்உண்மையில்என்னநினைக்கிறார்கள்? அது மட்டும்தான் எனக்குத் தேவை.

• டாக்டரிடம் பொய் சொல்லக் கூடாது என்பார்கள். இப்போது நானும் அந்த இடத்தில்தான் இருக்கிறேன். என்னிடம் எதையும் மறைக்காதீர்கள். • நோய் என்னவென்று தெளிவாகத் தெரிந்தால்தான் அதற்கு மருந்து கொடுக்க முடியும். • கழகத்தினர் உங்களிடம் சொல்லும் தகவல்களை வேறு யாரிடமும் பகிர்ந்துகொள்ளக் கூடாது. குறிப்பாக, சம்பந்தப்பட்ட நபர்களிடம் சொல்லக் கூடாது. • அப்படி செய்தால் இந்த ஆய்வின் நோக்கமே வீணாகிவிடும்.

• பிரச்சினைகளைச் சரிசெய்து, நம்மை மாற்றிக் கொண்டால்தான் அடுத்த 100 ஆண்டுகளுக்கு உயிர்ப்போடு இயங்க முடியும்.

• நீங்கள் தரும் அறிக்கையின் அடிப்படையில்தான் கழகத்தில் மாற்றங்கள், சீர்திருத்தங்களைச் செய்யப் போகிறேன்.

• அதனால் scan report போல துல்லியமாக இது இருக்க வேண்டும்.

• ஜூன் 5க்குள் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, இதன்மீதானநடவடிக்கைகளைஜூன்மாத இறுதிக்குள் முடித்திட வேண்டும்.

• உடன்பிறப்புகளின் உண்மையான உணர்வினை அறிந்து வந்து சொல்லுங்கள்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார நெருக்கடி: மத்திய அரசின் நிர்வாகத் திறமையின்மைக்கு ராமதாஸ் கண்டனம்



சென்னை, மே. 17

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருபதாவது;

இந்திய நாடு இன்று ஒரு மிகப்பெரிய பொருளாதாரப் பேரிடரை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை பிரதமர் நரேந்திர மோடியின் அண்மைக்கால அறிவிப்புகள் மிகத்தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளன.

மக்களை தங்கம் வாங்காதீர்கள், சமையல் எண்ணெயைக் குறைவாகப் பயன்படுத்துங்கள், பெட்ரோல் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளுங்கள் எனப் பிரதமர் விடுத்துள்ள வேண்டுகோள், தேசத்தின் பொருளாதார அடித்தளம் எந்த அளவுக்குத் தள்ளாடிக் கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது. கடந்த பத்து ஆண்டுகளாகப் "பொருளாதார வளர்ச்சியில் இந்தியா" எனப் பிரசாரம் செய்த நடுவண் அரசு, இன்று ஒட்டுமொத்த தோல்வியையும் சாமானிய மக்கள் தலையில் சுமத்தப் பார்ப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடியும் வரை சர்வதேச சந்தையைக் காரணம் காட்டி கச்சா எண்ணெய் விலை உயர்வைக் கட்டுப்படுத்தி வைத்திருந்த நடுவண் அரசு, தேர்தல் முடிவுகள்வெளியான சில நாட்களிலேயே, மே 15 அன்று பெட்ரோல், டீசல் விலையை லிட்டருக்கு ரூ.3 வரை அதிரடியாக உயர்த்தியுள்ளது. உலக அரசியல் சூழலைக் காரணம் காட்டி, மக்களைச் சிக்கனமாக இருக்கச் சொல்லி பிரதமர் கோரிக்கை வைப்பது அடுத்து வரப்போகும் கடுமையான விலை உயர்வுக்கு மக்களைத் தயார்படுத்தும் ஏமாற்று வேலையாகும். இதனாலேயே மோடியை எதிர்க்கட்சிகள் சாடும் நிலைக்கு நடுவண் அரசு ஆளாகியுள்ளது.

ஆட்சிக்கு வரும்போது "ஒரு டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பை ஒரு ரூபாயாக்குவோம்" என்று அறிவிப்புகளை வெளியிட்டார்கள், இன்று ரூபாயின் மதிப்பை 96 ரூபாய்க்கு அருகில் வீழ்ச்சியடையச் செய்து வேடிக்கை பார்க்கிறார்கள். இந்த மதிப்பு வீழ்ச்சியால், நாம் இறக்குமதி செய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் கூடுதல் சுமையைச் சுமக்க வேண்டியுள்ளது. குறிப்பாக, இந்தியப் பங்குச்சந்தையிலிருந்து சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் அந்நிய மூலதனம் வெளியேறியிருப்பது, உலக நாடுகளுக்கு இந்தியப் பொருளாதாரத்தின் மீது இருந்த நம்பிக்கை சிதைந்துவிட்டதையே உணர்த்துகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேறும்போது அமைதியாக இருந்த அரசு, இப்போது நடுத்தர வர்க்கத்தின்அடிப்படைத் தேவைகளைக்குறைத்துக் கொள்ளச் சொல்வது எவ்வகையில் நியாயம்? நடுவண் அரசின் தவறான வெளியுறவு மற்றும் பொருளாதாரக் கொள்கைகளே இந்த அவல நிலைக்கு முதன்மைக் காரணம்.

ஈரான் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் இந்தியாவுக்கு கச்சா எண்ணெயை இந்திய ரூபாயிலேயே வழங்கத் தயாராக இருந்தபோதும், அமெரிக்காவின்அழுத்தத்திற்கு அடிபணிந்து அந்த வாய்ப்புகளை நாம் இழந்தோம். இதனால் இன்று டாலர் தட்டுப்பாடு ஏற்பட்டு, அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணைத் தொட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்காமல், "மேக் இன் இந்தியா" என வெறும் விளம்பரங்களோடு நின்றதன் விளைவை இன்று ஒட்டுமொத்த நாடும் அனுபவிக்கிறது. நமது நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளையும், உழவர் பெருங்குடி மக்களையும் ஊக்குவிக்காமல் இறக்குமதியை மட்டுமே நம்பியிருப்பது, நம் நாட்டை அண்டை நாடான இலங்கையைப் போன்ற ஒரு பொருளாதாரச் சிக்கலில் தள்ளிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையிலும் (IT) உலகளாவிய மாற்றங்களுக்குத் தயாராகாமல், வேலை வாய்ப்புகளை இழக்கும் அபாயத்தில் நம் நாட்டு இளைஞர்களை இந்த அரசு நிறுத்தியுள்ளது. ஒரு புறம் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குப் பல லட்சம் கோடி ரூபாய் வரிச் சலுகைகளையும், ஊக்கத்தொகைகளையும் வாரி வழங்கும் நடுவண் அரசு, மறுபுறம் சாதாரண சாமானிய மக்களைத் தங்கம்வாங்குவதைக்குறைத்துக் கொள்ளுங்கள் என்று வேண்டுகோள் விடுப்பது வேடிக்கையாக உள்ளது. தங்கம் என்பது இந்தியக் குடும்பங்களின், குறிப்பாக ஏழைப் பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அரண் என்பதை இந்த அரசு உணரத் தவறிவிட்டது.

எனவே, நடுவண் அரசு இனியும் உண்மைகளை மறைக்காமல், நாட்டின் தற்போதைய ஒட்டுமொத்த பொருளாதார நிலை குறித்து உடனடியாக ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன். கார்ப்பரேட்டுகளுக்குச் சலுகை வழங்குவதை உடனடியாக நிறுத்திவிட்டு, ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் கைகளில் பணப்புழக்கத்தை அதிகரிக்க நேரடித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில்

## நடைபெற்று வரும் பல்வேறு நலத்திட்ட பணிகள் குறித்து தவெக திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் நேரில் ஆய்வு

திருப்பூர்மே .17

தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் திருப்பூர் தெற்கு தொகு தியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பால முருகன் எம் எல்ஏவாக பதவி ஏற்று திருப்பூர் திரும்பினார். திருப்பூர் மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் மேம்பால பணிகளை ஆய்வு செய்து போக்குவரத்து நெருக்கடி தீர ஒரு மாதத்திற்குள் பணிகளை முடித்து தருமாறு அறிவுறுத்தினார் மேலும் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்வையிட்டு செய்யப்பட வேண்டிய வசதிகள் குறித்தும் குறைகள் குறித்தும் கேட்டறிந்தார். பின்னர் திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் குறித்தும் நேரில் ஆய்வு செய்தார். இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசுகையில் திருப்பூரின் போக்குவரத்து நெரிசல் தீர முழுமையாக ஆய்வு செய்து மேம்பால திட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும். பள்ளி மற்றும் பேருந்து நிலையங்கள் அருகில் இருந்த டாஸ்மாக்கடைகள்மூடப்பட்டு வருவது மற்றும் தலைவரின் பல்வேறு நலத்திட்ட செயல்கள் பொதுமக்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தி உள்ளது என தெரிவித்தார்.



### கழிவு நீர் வெளியே செல்ல முடியாமல் கட்டப்பட்ட

## புதிய கால்வாய் குளம் போல் தேங்கியுள்ள கழிவு நீரால் நோய் தொற்று பரவும் அபாயம்; விளாத்திகுளம் பேரூராட்சி நிர்வாகம் அலட்சியம்

விளாத்திகுளம் மே 17

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட 13வது வார்டில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கழிவு நீர் கால்வாய் அமைக்கும் மற்றும் கால்வாயை மூடும் பிளேட் ஆகியவை டெண்டர் ஒதுக்கப்பட்டு பூமி பூஜை செய்து பணிகள் தொடங்கப்பட்டு, தற்போதுகழிவு நீர் கால்வாய் மட்டும், கட்டப்பட்டு பணிகள் முடிவடைந்த நிலையில், தற்போதுகட்டப்பட்ட புதிய கழிவுநீர் கால்வாயும், முறையாக அமைக்கப்படாததால் கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் கால்வாய்க்குள்குளம் போல் தேங்கி உள்ளது. கடந்த ஒரு வாரமாக பெய்த தொடர்மழையின் காரணமாக மழைநீர் கழிவு நீரில் கலந்து கழிவு நீரின் அளவு குளம்போல் அதிகரித்துள்ளதால், அப்பகுதி மக்கள் கொசுத் தொல்லை மற்றும் நோய் தொற்று பரவும் அபாயத்தில் தங்களின் அன்றாட வாழ்க்கையை கழித்து வருகின்றனர்.

இ து கு றி த் து விளாத்திகுளம் பேரூராட்சி நிர்வாகத்திடம் பல முறை புகார் அளித்தும் பேரூராட்சி நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியம் காட்டுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்,

எனவே பொதுமக்களின் சுகாதாரத்தை கவனத்தில் கொண்டு, மக்களின் பணத்தை வீணடிக்காமல் கட்டப்பட்ட கழிவு நீர் கால்வாயை சீரமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.



தேனி மாவட்டம், வீரபாண்டியில் அமைந்துள்ள அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற்று வரும் சித்திரைப் பெருந்திருவிழாவையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் பொதுமக்கள் பார்வைக்காக சிறப்புப் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் கண்காட்சியில் தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், மாவட்ட வளர்ச்சி பணிகள், சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் அரசுத் துறைகளின் சாதனைகள் தொடர்பான பல்வேறு புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த சிறப்புப் புகைப்படக் கண்காட்சியினை தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் (15.05.2026) நேரில் சென்று பார்வையிட்டு, ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், பொதுமக்கள் அதிக அளவில் கண்காட்சியை பார்வையிட்டு பயன்பெற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## திருச்சி பெண்ணை ஆபாசமாக பேசியவர் மீது குண்டர் சட்டம்

திருச்சி, மே. 17

திருச்சி மாவட்டம் கீரிப்பட்டியைச் சேர்ந்த ஜெயபால், அக்கம் பக்கத்தினர் மீது ஆபாச வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்த வழக்கில் கைது செய்யப்பட்டார். அவரது தொடர் குற்றச் செயல்களைத் தடுக்க, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், மத்திய சிறையில் உள்ள அவரிடம் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான ஆவணம் வழங்கப்பட்டது. இது அவரது குற்றச் செயல்களுக்கு ஒரு தடையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### துவரங்குறிச்சி அருகே

## பைக்குகள் மோதி விபத்து; ஒருவர் பலி



திருச்சி, மே. 17

திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியைச் சேர்ந்த கிருஷ்ணன் (58) என்பவர், மதுரை திருச்சி தேசிய நெடுஞ்சாலை 45 Bயில் விராலிமலை நோக்கி இருசக்கரவாகனத்தில்சென்றுகொண்டிருந்தபோது, சமத்துவத்தைச் சேர்ந்த கணேசன் (35) என்பவர் ஓட்டி வந்த வாகனம் மோதியதில் தலையில் பலத்த காயமடைந்தார்.

மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தஅவர்சிகிச்சைபலனின்றிஉயிரிழந்தார். இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### மணப்பாறை அருகே

## 2பைக்குகள் மோதி விபத்து; முதியவர் பலி



திருச்சி மே. 17

திருச்சி மாவட்டம் மருங்காபுரி அருகே பெரியராக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த நல்ல கோனார், கடந்த 13ஆம் தேதி சேதுபடாடி சாய்பாபா கோவில் அருகே இருசக்கர வாகனத்தில் சென்றபோது, ரவிச்சந்திரன் ஓட்டி வந்த வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் பலத்த காயமடைந்தார். மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது குறித்து துவரங்குறிச்சி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### மணப்பாறை

## சிப்காட் வளாகத்தில் தொழிலாளி பலி

திருச்சி, மே. 17

மணப்பாறை சிப்காட் பகுதியில் உள்ள Moa Engineering நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் எலக்ட்ரிக்கல் வேலை செய்து வந்த கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிரகோரி, உயர் மின்கம்பம் அமைக்கும் பணியின் போது தவறி கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது குறித்து மணப்பாறை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஸ்ரீரங்கம்: 80 கிலோ கஞ்சாவுடன் மூதாட்டி கைது

திருச்சி, மே. 17

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் ராம்ஜி நகர் பகுதியில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, புதிய காட்டூர் தண்ணீர் தொட்டி அருகே சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றிருந்த துளசி (85) என்பவரை பிடித்து சோதனை செய்தனர்.

அவரிடமிருந்து 80 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக ராம்ஜி நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து துளசியை கைது செய்துள்ளனர்.



### பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு வனத்துறை சார்பில்

## நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும்: தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலைகதிரவன் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை

தென்காசி,மே.17

தமிழகத்தில் 2026 ஆம் ஆண்டிற்க்கான சட்டமன்ற பொதுத் தேர்தல் நடந்து முடிந்த நிலையில் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர்கள் வாக்கு அளித்த, வாக்கு அளிக்காத மக்களுக்கும் தேர்தலை சிறப்பாக நடத்தி முடித்த அரசு அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக அனைவரையும் சந்தித்து வாழ்த்து பெற்று வருகின்றனர் அந்த வகையில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கி.மு.ராஜேந்திரன் ஆகியோர் தென்காசி மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் ஆகியோரை மரியாதை நிமித்தமாக சந்தித்தனர். அப்போது தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலைகதிரவன் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார் ஏழைகளின் ஊட்டியாக கருதப்படும் குற்றால அருவிகளில் குளிப்பதற்கு ஏழை எளிய மக்கள் அதிக அளவில் வருகின்ற நிலையில் பழைய குற்றால அருவியில் வனத்துறை சார்பில் குளிப்பதற்கு க ட் ட ண ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இயற்கையாக வருகின்ற நீரில் குளிப்பதற்கு இருபது ரூபாய் என்கிற கட்டணம் ஏற்புடையதல்ல அதனை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் மேலும் இங்கு வருகின்ற ஏழை எளிய மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் சுற்றுலா தளத்தில் குளித்து செல்வதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்கின்ற கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியரிடம் வைத்துள்ளார். அதனைத் தொடர்ந்து தென்காசி தாசில்தார் மணிகண்டனை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். இந்நிகழ்வில் தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர் மற்றும் முக்கிய கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



### கடையால்மூடு

## மதுக்கடையை மூட பெண்கள் போராட்டம்

அருமனை , மே. 17

கடையால் மூடு நடு நிலைபள்ளி . கிறிஸ்தவ தேவாலயம் மற்றும் முஸ்லிம் பள்ளிஅருகில் செயல் பட்டு வரும் டாஸ்மாக் கடையை உடனடியாக அடைக்க வேண்டும் என பெண்கள் போராட்டம் நடத்தினர். டாஸ்மாக் மூலம் பள்ளி ம ா ண வ ர் க ள் ம ற் று ம் கு டு ம ப ம் பாதிக்கப்படுவதாகவும், சாலையில் பெண்கள் மற்றும் பள்ளி செல்லும் கல்லூரி மாணவிகள் நடந்து போக முடியவில்லை எனவும், குடிமகன்கள் குடித்துவிட்டு க டை த் தி ண் ணை யி ல் உட்கார்ந்து பெண்களை கேலி, கிண்டல் செ ய் வ தே ா டு போ க் கு வ ர த் து பாதிக்கபடுகிறது.எனவே டாஸ்மாக் கடையை உடனடியாக மூட வேண்டும் என பெண்கள் போ ர ா ட் ட த் தி ல் ஈ டு ப ட் ட ன ர் . இதை அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலிசார் பெண்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். தமிழ்நாடு அரசும் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கே ட் டு க் கொ ள் ள ப்படுகிறோம்



## அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வு

தேனி மாவட்டம், அருள்மிகு கெளமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வாக நடைபெற்ற திருத்தேரோட்ட விழா (15.05.2026) பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு பக்தி பரவசத்துடன் சாமி தரிசனம் செய்தனர்.

இந்நிகழ்வில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங் பாரம்பரிய உடை அணிந்து விழாவில் கலந்து கொண்டு, பொதுமக்கள் மற்றும் பக்தர்களுடன் இணைந்து வடம் பிடித்து திருத்தேரோட்டத்தினை துவக்கி வைத்தார்கள். திருவிழாவையொட்டி கோயில் வளாகம் முழுவதும் மின்விளக்குகள் மற்றும் அலங்காரங்களால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் வசதிக்காக காவல் துறை, வருவாய்த்துறை மற்றும் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் பல்வேறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும், ஆயிரக்கணக்கான பக்தர்கள் “அம்மன் அருள்” முழக்கத்துடன் தேரை இழுத்து பக்தி உணர்வை வெளிப்படுத்தினர். விழாவில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கோயில் நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### இந்தியா முழுவதும் பைக் பயணம்

# இளம் பெண்ணுக்கு கன்னியாகுமரியில் வரவேற்பு



கன்னியாகுமரி, மே.17

உத்திரபிரதேசம் மாநிலம் மீரட் நகரை சேர்ந்தவர் டாப்சி உபாத்தியாய் (24). என்ஜினீயர் ஆவார். இவர் சுகாதாரமான பாரதம் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்தியா முழுவதும்மோட்டார்சைக்கிள்பயணம் மேற்கொள்ள முடிவு செய்தார்.

அதன்படி அவர் மீரட்டில் இருந்து கடந்த மார்ச் மாதம் 9ந்தேதி தனது மோட்டார் சைக்கிள் பயணத்தை தொடங்கினார். பஞ்சாப், அரியானா, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் உத்திரபிரதேசம், ஒடிசா. மகாராஷ்டிரா, ஆந்திரா,ஷ கர்நாடகா உள்பட 19 மாநிலங்கள் வழியாக 20 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தை கடந்து நேற்று கன்னியாகுமரி வந்தார். அங்கு வந்த அவரை கன்னியாகுமரி பகவதி அம்மன் பக்தர்கள் சங்க செயலாளர் முருகன் வரவேற்றார். இவர் வருகிற ஆகஸ்ட் மாதம் 15ந்தேதி சுதந்திர தினத்தன்று டெல்லியில் தனது மோட்டார் சைக்கிள் பயணத்தை முடிக்கிறார். மொத்தம் 700 நாட்கள் இந்த பயணத்தை மேற்கொள்ள அவர் திட்டமிட்டுள்ளார்.



### கன்னியாகுமரி

# பகவதியம்மன் கோவில் முன்பு தர்ணா பேராட்டம்

கன்னியாகுமரி,மே.17

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் முன்பு நேற்று காலை திடீர் தர்ணா போராட்டம் நடைபெற்றது. கோவிலின் பக்தர்கள் நல சங்க தலைவர் வக்கீல் சிவக்குமார் நாகப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். பகவதி அம்மன் கோவில் தெப்பக்குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர இடையூறு செய்யும் அதிகாரிகள், பாபநாசம் கால்வாயைபாழ்படுத்தியநீர்வளத்துறை அதிகாரிகள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் ஆகியோரை கண்டித்து இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதாக அதில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

### மேட்டுப்பாளையம் ஆர்.டி.ஓ.சத்தியகுமார் தலைமையில்

# தனியார் பள்ளி வாகனங்கள் ஆய்வு



கோவை மே:17

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் ஆர்.டி.ஓ. அலுவலகம் அருகில் உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் தனியார் பள்ளி வாகனங்களை ஆண்டுக்கு ஒரு முறை அதன் தரம் குறித்து ஆய்வு செய்யும் பணி நடைபெற்றது. இக்குழுவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்சத்தியகுமார்தலைமையில் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர்வினித்,தனியார்பள்ளிகல்வித்துறை அலுவலர் பரமசிவம்,மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் பாஸ்கரன்,வட்டாட்சியர் கவிதா,தீயணைப்பு நிலைய அதிகாரி அனில்குமார் ஆகியோர் இணைந்து ஆய்வு மேற்கொண்டார்கள்.இந்த ஆய்வில் மேட்டுப்பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட 58 தனியார் பள்ளிகளில் இயங்கும் சுமார் 535 பள்ளி வாகனங்களை ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் மூலம் பள்ளி வாகனங்கள் சரியான முறையில் இயங்குகின்றதா எனவும்,உரிய ஆவணங்களுடன் பராமரிக்கப்படுகிறதா எனவும் இக்குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். பின்பு குறைபாட்டில் உள்ள வாகனங்களுக்கு சோதனை அறிக்கை வழங்கி பள்ளி நிர்வாகத்திடம் சரி செய்து மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என அதிகாரிகள் உத்தரவிட்டார்கள்.மேலும் ஓட்டுநர் மற்றும் அணுகுநர்களுக்கு கண் சிகிச்சை முகாம் மூலம் கண் பரிசோதனை செய்தார்கள்.பின் சாலை பாதுகாப்பு தொடர்பாக தீ விபத்து மற்றும் சாலை விபத்தின் போது எவ்வாறு செயல்பட வேண்டும் என அவர்களுக்கு தீயணைப்பு துறை அதிகாரிகள் மூலம் பயிற்சி அளித்து விளக்க செயல் முறை செய்து காட்டினார்கள்.




# தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 658 பள்ளி வாகனங்கள் ஆய்வு

### 166 வாகனங்களில் குறைகளை நிவர்த்தி செய்ய 7 நாட்கள் அவகாசம்

தஞ்சாவூர் மே 17

தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த 658 பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப் பட்டதில் 166 வாகனங்கள் குறை பாடு இருப்பது கண்டறியப்பட்டு நிவர்த்தி செய்ய 7 நாட்கள் அவகா சம் அளிக்கப் பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் இயக்கப்படும் வாகன ங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. வட்டார போக்குவரத்து மற்றும் சாலை பாது காப்பு துறை சார்பில் பள்ளி வாகன ங்களில் வேக கட்டுப் பாட்டு கருவி பொருத்தப் பட்டுள்ளதா? பாதுகாப் பு, தீ தடுப்பு கருவி, முதல் உதவி பெட்டி போன்றவை சரியாக உள்ள தா? என ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டுக்கான ஆய்வு தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், பட்டுக் கோட்டை, கும்பகோணம், ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் பட்டது .தஞ்சாவூர் ஆயுதப்படை மைதானத்தில் பள்ளி வாகனங் களில் மாவட்ட கலெக் டர் பிரியங்கா பங்கஜம், மாவட்ட காவல் காணிப்பாளர் சுந்தர வதனம், ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்

ஒவ்வொரு வாகனங்களாக ஏறி சுப்ரீம் கோர்ட்டு சாலை பாதுகாப்பு குழு அறிவுறுத்தலின்படி பள்ளி வாகனங்களில் இருக்கைகளின் எண்ணிக்கை சரியாக இருக் கிறதா? பிரேக் நல்ல முறையில் இருக்கிறதா? படிக்கட்டுகள், தீ தடுப்பான் என ஒவ்வொன்றாக ஆய்வு செய்தனர்.

பள்ளி வாகனங்களுக்கான அனுமதி சீட்டு, தகுதி சான்று,காப்பு சான்று, புகை சான்று, வரி சான்று, வேகக் கட்டுப் பாட்டு கருவி பயன்பாடு நிலை, ஜி.பி. எஸ். கருவி பயன்பாடு, முதலுதவி பெட்டியில் மருந்துகள் இருப்பு நிலை உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்தும், பள்ளி வாகனங் களில் அவசர வழி முறையாகவும், அதை திறப்பது சிரமம் உள்ளதா? எனவும் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது பள்ளி குழந்தைகளை அழைத்துச் செல்லும் டிரைவர்கள் கவன முடன் செல்ல வேண்டும்.

டிரைவர்கள் செல்போன் பேசிக் கொண்டு வாகனங்களை ஓட்டக் கூடாது .ஒவ்வொரு பள்ளி வாகன ங்களிலும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை கருதி பெண் பணி யாளர்கள் கண்டிப் பாக இருக்க வேண்டும். குறைபாடுகள் உள்ள வாகனங்கள் குறைகளை சரி செய்து மீண்டும் ஆய்வுக்கு உட்படு த்த வேண்டும் எனவும் டிரைவர்களு க்கு அறிவுறுத்தப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூரி ல் 60 பள்ளிகளை சேர்ந்த 538 வாகனங்கள், பட்டுக்கோட்டையில் 45 பள்ளியைச் சேர்ந்த 365 வாகன ங்கள், கும்பகோணம் 59 பள்ளி களைச் சேர்ந்த 260 வாகனங்களில் என மொத்தம் 164 பள்ளிகளைச் சேர்ந்த 1,163 வாகனங்கள் அனுமதி சான்று வழங்கப்பட்டிருந்தது. ஆனால் 658 வாகனங்கள் மட்டுமே ஆய்வுக்கு வந்திருந்தது. இதில் 166 வாகனங்களில் குறைபாடுகள் கண்டறியப்பட்டதால் அந்த குறை களை நிவர்த்தி செய்ய 7 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது

முன்னதாக டிரைவர்களுக்கு செவித் திறன், கண்பார்வை பரி சோதனை செய்யப்பட்டது. மேலும் முதல் முறையாக தாசில்தார் நிலை யில் உள்ள வருவாய்த் துறையினர் பள்ளி வாகனங்களை ஆய்வு செய் தனர் .ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், மாவட்ட தீயணைப்பு அலுவலர் இரு சம்மாள், வருவாய் கோட்டாட்சியர் நித்யா, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ஜெய்சங்கர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பேபி மாவட்ட கலெக்டர் அலுவலக மேலாளர் (பொது) சீமான் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### முதுகுளத்தூர் டி.எஸ்.பி. அலுவலகத்தில்

# தலைமை காவலர்களுக்கு பயிற்சி முகாம்

முதுகுளத்தூர், மே.17

முதுகுளத்தூர்துணைக்கண்காணிப்பாளர் முதுகுளத்தூர் உட்கோட்ட அலுவலகத்தில் புலன் விசாரணை சம்பந்தமாக உட்கோட்டத்தில் உள்ள 43 தலைமை காவலர் களுக்கு வாக்கு மூலங்கள் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது எப்படி, கைது வாரண்ட் இல்லாமல் எப்பொழுது கைது செய்யலாம். சோதனை செய்யும் இடத்தில் நுழைந்து கைது செய்வது எப்படி என்பது பற்றி ராமநாதபுரம் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் சந்திஸ் உத்தரவின் பேரில் டி.எஸ்.பி சண்முகம் மற்றும் சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் அரேய்குமார் ஆகியோர் விளக்கமளித்தனர்.




### நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி

# திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், மே.17

தஞ்சாவூர் தலைமை தபால் நிலையம் முன்பு திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் அமர்சிங் தலைமையில் நடைப்பெற்றது.

மாநகர தலைவர் தமிழ்ச் செல்வன் வரவேற்றார். மாநில ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயக்குமார், குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் பெரியார் செல்வன், முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், மத்திய மாவட்ட தி.மு.க செயலாளர் துரை சந்திரசேகரன் எம்எல்ஏ, தி.மு.க தலைமை செயற்குழு உறுப்பினர் கள் டி.கே.ஜி.நீலமேகம், ராமசந் திரன், செல்வம், மாநகர செயலாளர் சண்.ராமநாதன், ம.தி.மு.க மாவட்ட செயலாளர் தமிழ் செல்வன், மாநகர செயலாளர் துரைசிங்கம் மற்றும் பல்வேறு கட்சி நிர்வாகிகள் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் இந்தியா முழுவதும் நீட் தேர்வை உடனடியாக மத்திய அரசு ரத்து செய்ய வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதில் தி.க, தி.மு.க, தே.மு.தி.க, விடுதலை சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்டுகள், ம.தி.மு.க, மக்கள் நீதி மய்யம், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், ம.ஜ.க மற்றும் பல்வேறு கட்சி, இயக்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### புதுக்கடை அருகே

# பைக்குகள் மோதல்; கல்லூரி மாணவர் படுகாயம்

புதுக்கடை,மே. 17

புதுக்கடை அருகே கீழ்குளம் பகுதியை சேர்ந்தவர் சிவரத்தினம் மகன் அபிஷேக் (20) இவர் பொறியியல் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். நேற்று முன்தினம் தனது தந்தையின் இருசக்கர வாகனத்தில் கீழ்குளத்திலிருந்து தேங்காப் பட்டணம் நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போது ஆயினிவிளை பகுதியில் சாலைக்கு எதிரில் மற்றொரு இரு சக்கர வாகனத்துடன் நின்றிருந்த நபர் திடீரென திருப்பியபோது அபிஷேக் இருசக்கர வாகனத்தில் மோதி உள்ளது. இதில் அபிஷேக் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தார். அவரை உடனடியாக மார்த்தாண்டத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### புதுக்கடை அருகே

# பெண்ணுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் மீது வழக்கு

புதுக்கடை, மே. 17

புதுக்கடை அருகே உள்ள வெள்ளையம்பலம் பகுதியை சேர்ந்தவர் கோகுல் மனைவி சுவேதா (25). இவரது தாய் தந்தையரின் வீடு பைங்குளம் பகுதியில் உள்ளது. இவர் தாய் தந்தையரின் வீட்டிற்கு செல்லும் போது வீட்டருகே உள்ள சசி (69) என்பவர் சுவேதாவையும் அவரது தாய் தந்தையரையும் கெட்ட வார்த்தைகள் பேசி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சுவேதா மீண்டும் தனது தாய் தந்தையரின் வீட்டில் நிற்கும்போது சசி அவரைப் பார்த்து கெட்ட வார்த்தைகள் பேசி கொலை மிரட்டல் கொடுத்ததாக தெரிகிறது. இது குறித்து சுவேதா புதுக்கடை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### புதுக்கடை அருகே

# கடனாக கொடுத்த பணம் நகைகளை திருப்பி கேட்டவர்கள் மீது தாக்கு; 3 பேர் மீது வழக்கு

புதுக்கடை, மே .17

கொட்டில்பாடு பகுதியை சேர்ந்தவர் ஜோஸ் சோனியா (35). இவரது உறவினர்களான பிரிஜிட் என்ற பாபி ( 45 ), பெனடிக்ட் என்ற அம்பாடி (50) ரெஜென்சி பானு (22) ஆகியோர் புதுக்கடை அருகே இனயத்தில் வசித்து வருகின்றனர். இவர்கள் ரெஜென்சி பானுவை வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்புவதற்காக கடந்த 2024 ஆம் ஆண்டு ரூ 2 லட்சத்து 21 ஆயிரத்து 500 வங்கிக் கணக்கிலும், 28 ஆயிரத்து 500 ஜி பே நம்பரிலும் மற்றும் மூன்றரை பவுன் தங்க நகைகளையும் வாங்கியுள்ளனர்.

அதன் பின்னர் ரெஜென்சி பானு வெளிநாட்டிற்கு சென்றுள்ளார். ஆனால் ஜோஸ் சோனியாவுக்கு கொடுக்க வேண்டிய பணத்தையும் நகைகளையும் கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளனர். இதனால் அவர் இணையத்தில் உள்ள அவர்கள் வீட்டில் சென்று பணத்தை கேட்டுள்ளார். அப்போது கெட்ட வார்த்தைகள் பேசி அவரையும் அவரது தங்கையும் தாக்கியதாக கூறப்படுகிறது.

உடனடியாக தகவல் அறிந்து ஜோஸ் சோனியாவின் தந்தையும் தம்பியும் வந்து தட்டி கேட்டுள்ளனர். அவர்களையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். காயம் அடைந்தவர்கள் குழித்துறை அரசு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தனர்.

இது குறித்து புதுக்கடை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் பாதிக்கப்பட்டவர்கள் குழித்துறை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். நீதிமன்ற உத்தரவின் படி புதுக்கடை போலீசார் தற்போது பணம் நகைகள் போன்றவற்றை வாங்கி ஏமாற்றிய பிரஜித் என்ற பாபி, பெனடிக்ட் என்ற அம்பாடி, ரெஜென்சி பானு ஆகிய மூன்று பேர் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# சர்பத் குடித்தவரிடம் பாக்கெட்டில் இருந்த பணத்தை பறித்தவர் கைது



சுசீந்திரம், மே. 17

சுசீந்திரம் அருகே உள்ள வடக்கு தாமரைக்குளம் குலாளர் தெருவை சார்ந்தவர் சதீஷ் 47 இவர் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறார் நேற்று சுசீந்திரம் பைபாஸ் ரோட்டு அருகே உள்ள சர்பத் கடையில் சர்பத் குடித்துக் கொண்டிருக்கும் பொழுது வழக்கம்பாறை பல் பநாபன்புதுர் பகுதியைச் சார்ந்த பால் பிரிண்ஸ் 32 என்பவரும் அதே பகுதி சார்ந்த மகேஷ் 40 என்பவரும் இருசக்கர வாகனத்தில் வந்துள்ளனர் சர்பத்குடித்துக் கொண்டிருந்த சதீஷைபார்த்து பால்பிரின்ஸ் பாக்கெட்டில் எவ்வளவு பணம் வைத்துள்ளாய் ரூபாயை எடு என மிரட்டி அவர் பாக்கெட்டில் இருந்த 1700 ரூபாயினை எடுத்துக்கொண்டு இதுகுறித்து யாரிடமாவது சொன்னால் கொன்று விடுவேன் என கொலைமிரட்டல் விடுத்து சென்றுள்ளார் இதுகுறித்து சதீஷ் சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரியின் பேரில் சுசீந்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து பணத்தைப் பறித்து சென்ற பால் பிரின்ஸை கைது செய்து சிறையில் அடைத்தனர்




# ஏஐ சார்ந்த மனித வள பணியாளர் கட்டமைப்பு தளத்தை உருவாக்கும் சிஐஇஎல்

சென்னை, மே 17,

சிஐ இஎல் எச்ஆர் பணியாளர்களின் பணிச்சுழற்சி முழுவதற்கும் தேவையான தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை வழங்கும் இந்தியாவின் ஒரே நிறுவனம் ஆகும். 37 இடங்களில் 83 அலுவலகங்களைக் கொண்டுள்ள இந்நிறுவனம், 1,450க்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் 7,000க்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு மனித வளத்துறையில் விரிவான சேவைகளை வழங்கி வருகிறது.

2026 நிதியாண்டில் 32% வளர்ச்சியைப் பதிவு செய்து, அதன் வருவாயை கிட்டத்தட்ட ரூ.2,000 கோடியாக உயர்த்தியுள்ளதாக அறிவித்துள்ளது. அத்துடன், எதிர்கால வேலைவாய்ப்புச் சூழலுக்கு ஏற்ப செயற்கை நுண்ணறிவு சார்ந்த பணியாளர் கட்டமைப்பு தளத்தை உருவாக்கும் நோக்கில் சிஐஇஎல் எச்ஆர் 3.0: விஷன் 2030 என்ற புதிய வளர்ச்சித் திட்டத்தையும் அறிவித்திருக்கிறது.

இந்த மேம்பாட்டிற்கான மாற்றத்தின் ஒரு பகுதியாக, சிஐ இஎல் குழுமத்தின் ஜாம்பே (Jombay) நிறுவனம், அதன் செயற்கை நுண்ணறிவுதளத்தின் மூலம் பல்வேறு மனிதவள செயல்பாடுகளுக்கான கருவிகளை உருவாக்கியுள்ளது.

மேலும், திறன் நுண்ணறிவு திறன்களை வலுப்படுத்தும் வகையில், சிஐ இஎல் குழுமத்தின் மற்றொரு நிறுவனமான "தாமஸ் அசஸ்மெண்ட்ஸ் இந்தியா" செயற்கை நுண்ணறிவு சார்ந்த திறன் மதிப்பீட்டு தளத்தை அறிமுகப்படுத்த உள்ளது. இந்த தளம், உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட நடத்தைப் பண்புகள், கற்றல் தகுதி, உணர்வுசார் நுண்ணறிவு மற்றும் தலைமைத்துவ திறன் ஆகிய நான்கு உளவியல் திறன் மதிப்பீட்டுகருவிகளையும் ஒரே ஒருங்கிணைந்த தீர்வாக வழங்குகிறது.

இது குறித்து சிஐ இஎல் மனிதவள குழுமத்தின் நிர்வாகத் தலைவர் க.பாண்டியராஜன் கூறுகையில், மாஃபா முதல் சிஇ ஐஎல் வரையிலான பயணம் என்பது வெறும் வணிக வளர்ச்சியை மட்டுமே பிரதிபலிப்பதல்ல. இந்திய பணியாளர் சூழலின் பரிணாம வளர்ச்சியையும் வெளிப்படுத்துகிறது. சிஐஇஎல் எச் ஆர் ஐ தொடங்கியபோது, தொழில்நுட்பமும் செயற்கை நுண்ணறிவும் நிறுவனங்கள் திறமைகளை தேர்வு செய்வது, நிர்வகிப்பது மற்றும் மேம்படுத்துவது போன்ற செயல்முறைகளில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்று நாங்கள் நம்பினோம்.

வேகமாக மாறிவரும் பணி உலகிற்கேற்ற நுண்ணறிவு மிக்க, ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான மனிதவள தீர்வுகளை மேலும் மேம்படுத்துவது மீது எங்கள் கவனம் இருக்கும்" என்றார்.

# கிரசன்ட் ஸ்கூல் ஆஃப் பிசினஸ் அறிமுகப்படுத்தும் ரியல் எஸ்டேட் துறைக்கான எம்.பி.ஏ படிப்பு




சென்னை, மே 17,

அப்துர் ரஹ்மான் கிரசென்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், ராயல் இன்ஸ்டிடியூஷன் ஆஃப் சார்ட்டர்ட் சர்வேயர்ஸ் (RICS) கூட்டணியில் எம்பிஏ ஆர்இஎம் படிப்பு தென்னிந்தியாவில் முதன்முறையாக அறிமுகப்படுத்தும் விழா சென்னையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அப்துர் ரஹ்மான் கிரசென்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இணைவேந்தர் ஏ.க்யூ. அப்துல் ரஹ்மான், பதிவாளர் ராஜா ஹுசைன், துணைவேந்தர் சீனிவாசன் மற்றும் ரிக்ஸ் நிறுவனத்தின் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

1868 ஆம் ஆண்டு லண்டனை தலைமையிடமாக கொண்டு தொடங்கப்பட்ட ரிக்ஸ் (Rics) நிறுவனம் நிலம், சொத்து, கட்டுமானம், மதிப்பீடு மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் தரநிலைகள் மற்றும் தகுதிகளுக்கான உலகின் முதன்மையான தொழில்முறை அமைப்பாகும்.

ரியல் எஸ்டேட் கல்வி, கட்டிடக்கலைத் துறைகள், சிவில் இன்ஜினியரிங் பள்ளிகள் மற்றும் பொதுவான எம்பிஏ விருப்பப் பாடங்கள் என பல துறைகளில் சிதறிக் கிடக்கும் ஒரு சூழலில், இவை அனைத்தையும் ஓரிடத்தில் பயிலும் அரிய வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது.

மாணவர்கள் நேரடித் தொழில் திட்டங்கள், கட்டமைக்கப்பட்ட உள்ளகப் பயிற்சிகள், நிபுணர் அமர்வுகள், மற்றும் கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் தொழில்முறை வலையமைப்பு ஈடுபாடுகளில் பங்கேற்பார்கள். இந்த பாடத்திட்டம் ஏஐசிடிஇ (AICTE) ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# 6 முக்கிய கோரிக்கைகளுடன் முதல்வரை நேரில் சந்தித்த கமல்ஹாசன்

சென்னை, மே. 17

நடிகராக இருந்த அரசியலுக்கு வந்தவர் விஜய். அவருக்கு ஏராளமான ரசிகர்கள் கூட்டம் இருந்ததாலும், பொதுமக்களும் ஆதரித்ததாலும் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் தவெகவை 108 தொகுதிகளில் வெற்றி பெற வைத்து விட்டனர். அதோடு, முற்போக்கு கூட்டணியிலிருந்த சில கட்சிகளின் ஆதரவை பெற்று தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைத்திருக்கிறது.

விஜயும் முதல்வராக மாறியிருக்கிறார். விஜய் முதல்வராக பொறுப்பேற்றவுடன் திமுக தலைவர் முக ஸ்டாலின், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, அன்புமணி ராமதாஸ், சீமான், திருமாவளவன் உள்ளிட்ட பலரையும் சந்தித்தார். எனவே நடிகரும், மக்கள் நீதி மையத்தின் தலைவருமான கமலையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த சந்திப்பு நடக்கவில்லை. ஏனெனில் கமல் கடந்த சில நாட்களாக அமெரிக்காவில் இருந்தார். இந்நிலையில் அமெரிக்காவிலிருந்து திரும்பிய கமல் முதலமைச்சர் விஜயை நேரில் சந்தித்திருக்கிறார்.

இது தொடர்பான புகைப்படங்களை கமல் தனது சமூகவலைத்தளங்களில்



பகிர்ந்து 'தமிழ்நாடு முதலமைச்சர், தம்பி விஜய் நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தேன். தமிழ்நாட்டை மேம்படுத்தும் பல கனவுகளை உற்சாகத்துடன் பகிர்ந்துகொண்டார்.

சந்திப்பின்போது அவர் காட்டிய பண்பும் அன்பும் நெகிழ்ச்சியளித்தது. பல்வேறு இடையூறுகளைச் சந்தித்து வரும் தமிழ்த் திரைப்படத் துறைக்கு தமிழ்நாடு அரசின் ஆதரவும் அரவணைப்பும் வேண்டும் என்பதை வலியுறுத்தி 6 முக்கியமான கோரிக்கைகளை அவரிடம் கொடுத்திருக்கிறேன். நன்மை மலரட்டும்' என பதிவிட்டிருக்கிறார்.

## 2 சதவீத அகவிலைப்படி உயர்வு

# முதலமைச்சர் விஜய்க்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் நன்றி

திட்டக்குடி, மே.17:

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் கடலூர் மாவட்ட தலைவர் க.அன்பழகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மற்றும் அதில் இணைப்பு உள்ள இணைப்புச் சங்கங்கள் ஆக மொத்தம் தமிழக முழுவதும் பணிபுரியும் அனைத்து அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் அனைத்து நிலை பணியாளர்களுக்கு இந்த சதவீதம் அகவிலைப்படி 1.1.2026 முதல் வழங்கப்பட்ட வேண்டியது நிலுவையில் உள்ளது என்றும் தேர்தல் காரணங்களால் அகவிலைப்படி தள்ளிப் போனது என்பதை சுட்டிக் காட்டி அதை உடனடியாக தமிழ்நாடு முதலமைச்சர் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை கடத்த 11.5.2026 அன்று முதலமைச்சருக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில தலைவர் வெ.மகேந்திரகுமார் கோரிக்கை கடிதம் கொடுத்திருந்தார். முதலமைச்சர் அக்கடித்தை பரிசீலனை செய்து அரசு அலுவலர்கள் ஆசிரியர்களுக்கு அனைத்து நிலை பணியாளர்களுக்கும் முதல் அறிவிப்பாக 1.1.2026 முதல் விடுபாடுகள் ஏதுமின்றி 58 சதவீதத்தில் இருந்து 60 சதவீதமாக இரண்டு சதவீதம் அகவிலைப்படி உயர்வை அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய கடலூர் மாவட்ட மையத்தின் சார்பாக மாவட்ட தலைவர் க.அன்பழகன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

## பேயன்குழி

# இரட்டை கரை சாலை பராமரிக்க தக்கலை ஒன்றிய பாஜக சார்பில் ஆட்சியரிடம் மனு

நாகர்கோவில் மே 17

பேயன் குழி பரசேரி பழுதடைந்த சாலைகளை சீரமைக்க க்கோரியும் நுள்ளி விளை ரயில்வே பால வேலையை துரிதப்படுத்தவும் தக்கலை ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி சார்பாக தக்கலை ஒன்றிய பொறுப்பாளர் ராதாகிருஷ்ணன் தலைமையில் மாவட்ட ஆட்சியாளரிடம் மனு அளிக்கப்பட்டது

அந்த மனுவில் கூறியிருப்பதாவது : நுள்ளி விளை ரயில்வே பாலம் உடைக்கப்பட்டு பேயன்குழி பாலம் ஆற்றங்கரை சாலை வழியாக பரசேரி வரை மாற்றுப் பாதை வழியாக பேருந்துகள் இயங்குகின்றன .தற்போது இச்சாலை மழையின் காரணமாக பேருந்துகள் செல்லும்போது கவிழும் அளவிற்கு மோசமான குண்டு குழிகள் நிறைந்துள்ளதால் சாலையை செப்பனிடக் கோரியும் ரயில்வே மேம்பால பணிகளை துரிதமாக பணி நிறைவு செய்யவும் வேண்டி வணக்கம் தக்கலை ஊராட்சி உட்பட்ட 25க்கு மேற்பட்ட ஊர் மக்கள் இப்பகுதி வழியாக பயணித்து வருகின்றனர் இவ்வழியாகத்தான் திங்கள் சந்தை குளச்சல் தேங்காபட்டணம் கருங்கல், பகுதிகளுக்கு பேருந்து செல்கின்றன தற்பொழுது ஏற்பட்ட மழையின் காரணமாக ஆற்றங்கரையின் இரு பக்கங்களிலும் குண்டும் குழியுமாக உள்ளதால் பேருந்து செல்லும் போது கவிழும் அளவிற்கு பேருந்து அசைவு அமைகிறது பஸ்ஸில் பயணிக்கும் ஒவ்வொரு நபர்களும் பஸ் கவிழ்ந்து விடுமோ என்ற அச்ச உணர்வுடன் செல்கின்றனர் எனவே இப்பகுதியை நேரடியாக ஆய்வு செய்து சாலையை தரமானதாக செப்பனிட்டு தருமாறும் மேலும் நுள்ளிவிளை பகுதியில் உடைக்கப்பட்ட ரயில்வே பாலப் பணியை ரயில்வே துறையிடம் தெரிவித்துபணியை துரிதப்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

உடன் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பாளர் ராமகிருஷ்ணன் அகஸ்தீஸ்வரம் ஒன்றிய பொறுப்பாளர் ஆறுமுகப்பெருமாள், ,உலகநாதன், மகேஷ், வேலப்பன், கேசவன் ஆகியோர் இருந்தனர்.

## அனைத்து வெடி பொருள்கள் உற்பத்தி நிலையங்களில்

# விதிமீறில் கண்டறியப்பட்டால் உரிமம் ரத்து

### கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும்: கலெக்டர்எச்சரிக்கை

தஞ்சாவூர் மே 17

அனைத்து வெடி பொருள்கள் உற்பத்தி நிலையங்களில் 7 நாட்களுக்குள் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும். விதி மீறல்கள் கண்டறியப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும் என தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டு ள்ள செய்தி குறிப்பில் கூறியிருப் பதாவது

அனைத்து வெடிபொருள்கள் உற்பத்தி நிலையங்களில் வெடி தயாரிப்புக்கான மூலப் பொருட்களை கலந்து உடனடியாக வெடியாக மாற்றி விட வேண்டும். வெடி பொருளுக்கான கலவையை இருப் பில் வைத்திருக்கக் கூடாது.

அனைத்து வெடிபொருள்கள் உற்பத்தி நிலையங்களிலும் அனுமதிக்கப்பட்ட அளவிலான மூலப்பொருட்களை மட்டுமே சேமித்து வைக்க வேண்டும் . மூலப் பொருள்களின் இருப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து சரக வருவாய் ஆய்வாளர்களால் வாரம் ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும்.

அனைத்து வெடிபொருள்கள் உற்பத்தி நிலையங்களிலும் தாசில்தாரால் வாரம் ஒரு முறை யும் ,வருவாய் கோட்ட அலுவலரால் 15 நாட்களுக்கு ஒரு முறையும் கண்காணிக்கப்பட வேண்டும். ஏதேனும் விதி மீறல்கள் கண்டறியப்பட்டால் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையினரால் உடனடியாக மாவட்ட வருவாய் அலுவலருக்கு அறிக்கை அனுப்பப் பட வேண்டும்.

அதே நேரத்தில் விதிமுறைகளை கடைபிடிக்காத வெடி உற்பத்தி நிலையங்கள் மீது கடும் நடவடிக் கை எடுக்கப்படும். விதி மீறல்கள் கண்டறியப்பட்டால் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும் .பொது மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் கடுமையாக தடுக்கப்பட வேண்டும், உரிமம் பெற்ற வளாகத்தில் தீயணைப்பான், தண்ணீர் மற்றும் மணல் வாளிகள் தயார் நிலையில் இருக்க வேண்டும். அனைத்து வெடிபொருள்கள் உற்பத்தி நிலையங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் 7 நாட்களுக்குள் பொருத்தப்பட வேண்டும். மேற்கண்டவாறு அதில் கூறப் பட்டுள்ளது.

## அனைத்து வெடி பொருள்கள் உற்பத்தி நிலையங்களில்

# விதிமீறில் கண்டறியப்பட்டால் உரிமம் ரத்து 7 நாட்களுக்குள் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும்: கலெக்டர் எச்சரிக்கை



தஞ்சாவூர் மே 17

அனைத்து வெடி பொருள்கள் உற்பத்தி நிலையங்களில் 7 நாட் களுக்குள் கண்காணிப்பு கேமராக்கள்பொருத்த வேண்டும். விதி மீறல்கள் கண்டறியப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும் என தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் எச்சரிக்கை விடுத்து ள்ளார்

இது தொடர்பாக அவர் வெளியிட்டு ள்ள செய்தி குறிப்பில் கூறியிருப் பதாவது

அனைத்து வெடிபொருள்கள் உற்பத்தி நிலையங்களில் வெடி தயாரிப்புக்கான மூலப் பொருட் களை கலந்து உடனடியாக வெடி யாக மாற்றி விட வேண்டும். வெடி பொருளுக்கான கலவையை இருப் பில் வைத்திருக்கக் கூடாது.

அனைத்து வெடிபொருள்கள் உற்பத்தி நிலையங்களிலும் அனுமதிக்கப்பட்ட அளவிலான மூலப்பொருட்க ளை மட்டுமே சேமித்து வைக்க வேண்டும் . மூலப் பொருள்களின் இருப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து சரக வருவாய் ஆய்வாளர்களால் வாரம் ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும்.

அனைத்து வெடிபொருள்கள் உற்பத்தி நிலையங்களிலும் தாசில்தாரால் வாரம் ஒரு முறையும் ,வருவாய் கோட்ட அலுவலரால் 15 நாட்களுக்கு ஒரு முறையும் கண்காணிக்கப்பட வேண்டும். ஏதேனும் விதி மீறல்கள் கண்டறிய ப்பட்டால் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையினரால் உடனடியாக மாவட்ட வருவாய் அலுவலருக்கு அறிக்கை அனுப்பப் பட வேண்டும்.

அதே நேரத்தில் விதிமுறைகளை கடைபிடிக்காத வெடி உற்பத்தி நிலையங்கள் மீது கடும் நடவடிக் கை எடுக்கப்படும். விதி மீறல்கள் கண்டறியப்பட்டால் உரிமம் நிரந்த ரமாக ரத்து செய்யப்படும் . பொது மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் கடுமையாக தடுக்கப்பட வேண்டும், உரிமம் பெற்ற வளாகத்தில் தீயணைப்பான், தண்ணீர் மற்றும் மணல் வாளிகள் தயார் நிலையில் இருக்க வேண்டும். அனைத்து வெடி பொருள்கள் உற்பத்தி நிலையங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் 7 நாட்களுக்குள் பொருத்தப்பட வேண்டும். மேற்கண்டவாறு அதில் கூறப் பட்டுள்ளது.

## வழுக்கம்பாறை சகாயபுரம் இடைவிடா சகாய அன்னை திருத்தலத்தில்

# பத்தாம்திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது

சுசீந்திரம், மே. 17

சுசீந்திரம் அருகே உள்ள சகாயபுரம் இடைவிட சகாய அன்னை திருத்தல திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. காலை 6:30 மணிக்கு திருப்பலியும் மாலை 6 மணிக்கு ஜெபமாலை மற்றும் திருக்கொடியேற்றம் நடைபெற்றது. திருக்கொடியேற்ற திருப்பலி யில்கோட்டார் மறை மாவட்ட ஆயர் நசரேன் சூசை தலைமை தாங்கி மறையுரை வழங்கினார். திரு விழா நாட்களில் தினமும் ஜெபமாலை, நவநாள் திருப்பலி, நற்கருணை ஆசீர், அன்பியம், பக்தசபை இயக்கங்களின் ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவின் ஒன்பதாம் திருவிழாவான நேற்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலியும் மாலை 6:00 மணிக்கு கோட்டார் மறை மாவட்ட செயலாளர் மரிய கிளாட்சன் தலைமையில் சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெற்றது. இதில் மறை மாவட்ட அன்பிய பணிக்குழு செயலாளர் சகாய கிளாட்சன் மறையுரை வழங்கினார். இரவு 8 மணிக்கு தேர் பவனி நடைபெற்றது.திருவிழாவின் நிறைவு நாளான இன்று ஞாயிறு 6:30 மணிக்கு திருப்பலியும் காலை 8.00 மணிக்கு மறை மாவட்ட முதன்மை அருட் பணியாளர் ஜாண் ரூபஸ் தலைமையில் திருவிழா சிறப்பு திருப்பலி நடைபெறுகிறது.இதில் பணி குழுக்களின் ஒருங்கிணைப்பு செயலாளர் எட்மண்ட் மறையுறையாற்றுகின்றார். மாலை 5.00 மணிக்கு திருப்பலியுடன் கொடி இறக்க திருப்பலி நடக்கிறது.திருப்பலிக்கு நம் வாழ்வு துணை ஆசிரியர் ஞானசேகரன் தலைமை தாங்குகிறார். திருப்பலியில் இனையம் இணை பங்கு தந்தை ஜெனிஷ் கவின் மறையுரை வழங்குகிறார். தேவ சகாயம் மவுண்ட் இணைபங்கு தந்தை ஞானராய் இணைந்து ஜெபிக்கிறார். இரவு 8 மணிக்கு பங்கு இறைமக்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. விழாவிற்கான ஏற்பாடுகளை ஆலய பங்குத்தந்தை ஜோசப் ரொமால்ட் இணை பங்குத் தந்தை அஜின் ராஜ் பங்கு பேரவை துணைத் தலைவர் சகாய ராஜன் செயலாளர் சகாயராஜ் துணைச்செயலாளர் சபிலா ரோஸ்லின் ஷீபா பொருளாளர் சர்மிளா பானு மற்றும் பங்கு பேரவையினர் பங்கு மக்கள் இணைந்து செய்து வருகின்றனர்.

# த.வெ.க.வில் இணைந்த மக்கள் சேவகர் டி.ஆர்.சண்முகசுந்தரம்



கோவை, மே:17

தி.மு.க.வில் இருந்து விலகி சுயேச்சையாக போட்டியிட்ட மக்கள் சேவகர் டி.ஆர். சண்முகசுந்தரம் த.வெ.க.வில் இணைந்தார்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் தொழிலதிபர் மக்கள் சேவகர் டி.ஆர்.சண்முகசுந்தரம். இவர் தி.மு.க.மாநில செயற்குழு உறுப்பினராக இருந்தார்.

சட்டசபை தேர்தலில் தி.மு.கவின் மேட்டுப்பாளையம் வேட்பாளராக போட்டியிட வாய்ப்பு கிடைக்காததால் சுயேட்சையாக போட்டியிட்டார்.

26,756 ஓட்டுகள் பெற்று மேட்டுப்பாளயத்தில் தி.மு.க. வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம் தோல்வியடைவதற்கு முக்கிய காரணமாக இருந்தார்.

இந்நிலையில் கோபிசெட்டிபாளையத்தில் அமைச்சர் செங்கோட்டையன் முன்னிலையில் மக்கள் சேவகர் சண்முகசுந்தரம் த.வெ.க.வில் இணைந்தார்.

சண்முகசுந்தரம் கூறுகையில், மேட்டுப்பா ளையத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றிக்கு நான்தான் காரணம்.

வெற்றி பெற்ற இடத்தில் இருப்பது தான் சரி என்று த.வெ.க.வில் இணைந்துவிட்டேன்.முதல்வர் விஜய் மக்களுக்கு நல்லாட்சி கொடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.அதனால் த.வெ.க.வில் மக்கள் பணியை தொடரவுள் ளேன் என்றார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.